## இலங்கை தேசிய பொறியியல் ஆய்வு அபிவிருத்தி நிலையம் - 2016

---

இலங்கை தேசிய பொறியியல் ஆய்வு அபிவிருத்தி நிலையத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் 2 ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை இலங்கை தேசிய பொறியியல் ஆய்வு அபிவிருத்தி நிலையத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 பெற வேண்டிய கணக்குகள்

நிறுவனத்தினால் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்த குறைபாடுகளுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய காலம் முடிவடைந்திருந்த 03 வாணிப செயற்திட்டங்களின் ரூபா 749,110 தொகைக்கான தடுத்து வைத்தல் பணம் கணக்காய்வுத் திகதியாகிய 2017 ஜூலை 30 திகதி வரை உரிய நிறுவனங்களிலிருந்து அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிலையத்தின் நிதி விளைவுகள் ரூபா 5,744,897 இற்கான பற்றாக்குறை ஒன்றாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,238,655 தொகையாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 3,506,242 இனால் வளர்ச்சியடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் இணக்கஞ் செய்யும் போது மீளாய்வாண்டின் அரச மானியம் ரூபா 21,070,777 இனால் மற்றும் காலத்தேய்மான சீராக்கல் ரூபா 14,649,682 இனால் அதிகரித்திருந்த போதிலும், செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 36,569,186 இனால் அதிகரித்தல் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 2,657,516 இனால் குறைவடைதல் இப் பற்றாக்குறை அதிகரிப்பதற்கு முக்கியமாக பாதித்திருந்தது.

முன்னைய ஆண்டினதும் கடந்த 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது, 2012 ஆண்டின் போது ரூபா 26,982,577 தொகைக்கான பற்றாக்குறை 2015 ஆண்டு அளவில் ரூபா 2,238,655 தொகை வரை குறைந்திருந்த போதிலும் 2016 ஆண்டின் போது அது மீண்டும் ரூபா 5,744,897 தொகை வரை வளர்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் செய்யும் போது 2012 ஆண்டின் போது ரூபா 179,994,271 தொகைக்கான நிலையத்தின் பங்களிப்பு இடையறாது வளர்ச்சியடைந்து மீளாய்வாண்டின் போது ரூபா 260,341,682 தொகையாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

1974 இன் 14 ஆம் இலக்கம் மற்றும் 124/6 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் நிலையத்தை செயற்படுத்துவதன் பிரதான குறிக்கோள்களாவன,

- இலங்கையில் நவீனமய மற்றும் வடிவமைத்தல் திறமைகளுக்கு தைரியம் அளிப்பதன் மூலமும், உதவி வழங்குவதன் மூலமும், தொழில்நுட்பவியல் அபிவிருத்திக்கு தேவையான நிருவாக ரீதியான முறைமையினை ஏற்படுத்துவதற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளல்.
- அரச மற்றும் தனியார் துறையின் பல்வேறு கைத்தொழில்களில் மற்றும் நிறுவனங்களின் தொழிநுட்பவியல், பொறியியல் மற்றும் ஆய்வுத் திறமைகளை ஒன்றிணைப்பதற்காக வசதிகளை ஏற்படுத்தல்.
- நாட்டின் மூலவள செல்வத்திற்கு மற்றும் தேசிய திட்டமிடலின் குறிக்கோள்களுக்கு இணங்கும் தொழிநுட்பம் சார் கலையினை மாற்றி இசைவுறுத்துவதற்கு மற்றும் அவற்றை பயன்படுத்துவதற்கு பொறுப்பாக இருத்தல்.
- அரச மற்றும் தனியார் துறைகளில் பொறுத்தமான நிறுவனங்களுக்கு நேரடியாக மற்றும் மறைவான முறையிலும் தொழிநுட்ப முறையினை மாற்றும் யுக்திகளை பரிசோதனை செய்தல் மற்றும் அந்த நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கள்.
- பொருத்தமான தொழிநுட்பவியல் முறையினை முன்னேற்றுவதன் மூலம் விஷேடமாக தொழில் உழைப்பு மற்றும் மூலப்பொருள் வளங்களின் மூலம் உச்ச பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு ஆதரவு வழங்குதல்.
- விண்ணப்பிக்கும் போது மாதிரி இயந்திரங்கள் மற்றும் முன்னோடி இயந்திர அறைகள் சிக்கனத்துடன் திட்டமிடல், உற்பத்தி செய்தல் மற்றும் பரிசோதனை மேற்கொள்ளல்.
- பொறியியல் தொழிநுட்ப திட்டங்கள் மற்றும் ஆய்வுகள் மீதான தொழிநுட்ப தரவுகள் மற்றும் பதிவேடுகள் இடையறாது கணிப்பீடு செய்வதற்காக நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல்.
- அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில் முயற்சிகளுக்கு இடையறாத உசாத்துணை சேவைகள் வழங்கள், பொறியியல் மற்றும் தொழிநுட்ப திட்டமிடல் அடிப்படை போலவே ஆய்வு இயலுமைகளை விரிவாக்குவதற்காக ஆய்வு விவகாரங்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் பயிற்சி வழங்கள் விடயங்களை முன்னேற்றல்.

மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் செயலாற்றுகையை பரிசோதனை செய்த போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 70 தொழிநுட்ப சாட்டுதல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கியதன் மூலம் ரூபா 502,000 தொகை மற்றும் 137 அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தலினால் ரூபா 200,000 இற்கான வருமானமொன்றினை உழைப்பதற்கு இலக்காக இருந்த போதிலும், சில தொழிநுட்பங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு முடியாமையினால் சில தொழில்நுட்பங்களுக்கு கேள்விகள் காணப்படாமையினால் 18 அனுமதிப்பத்திரங்கள் வழங்கியதன் மூலம் ரூபா 76,000 தொகை மற்றும் 60 அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்ததன் மூலம் ரூபா 89,000 இற்கான வருமானம் ஒன்று மாத்திரம் உழைப்பதற்கு முடியுமாக இருந்தது.

(ஆ) நிலையத்தினால் அறிமுகப்படுத்திய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி 24 குறைந்த செலவில் நிர்மாண வேலைகள் மற்றும் பழுதுபார்த்தல் வேலைகள் வழங்கியதன் மூலம் ரூபா 68,000,000 இற்கான வருமானமொன்று 22 கட்டிட நிர்மாண வேலைகளுக்கு உசாத்துணை சேவைகள் வழங்கியதன் மூலம் ரூபா 6,160,000 இற்கான வருமானமொன்று மற்றும் பண்டங்கள்/ இயந்திரங்கள் மற்றும் கொங்கிரீட் துணைக் கருவிகள் வழங்கியதன் மூலம் ரூபா 7,800,000 இற்கான வருமானமொன்றினை உழைத்தல் இலக்காத இருந்த போதிலும், புதிய நிர்மாண வேலைகள் கவர்வதற்கு முடியாமை, பொறியியல் மற்றும் தொழிநுட்பவியலாளர்களை தடுத்து வைக்க முடியாமையின் காரணமாக நெருங்கியிருந்த இலக்குகளாவன. 12 நிர்மாண வேலைகளில் இருந்து ரூபா 21,165,000 உம், இயந்திரங்கள் வழங்கியதன் மூலமாக ரூபா 2,400,000 உம் மற்றும் 16 உசாத்துணை சேவைகளின் மூலம் ரூபா 2,780,000 இற்கான வருமானம் மாத்திரமே.

(இ) திட்டங்களை வடிவமைத்தல் மற்றும் கைத்தொழல்களுக்கு ஆலோசனை வழங்கும் துறையின் மூலம் மேற்கொள்ளும் பல்வேறு அச்சுகள் வடிவமைப்பதற்காக 140 வேலைக் கட்டளைகள் பெற்றதன் மூலம் ரூபா 7,500,000 இற்கான வருமானமொன்றினை உழைத்தல் இலக்காக இருந்த போதிலும், உரிய சந்தர்ப்பங்களில் இயந்திரங்கள் பழுதுபார்க்கப்படாமையால் 40 சேவைகள் வழங்கியதன் மூலம் ரூபா 1,967,000 இற்கான வருமானம் ஒன்றினை மாத்திரம் உழைத்திருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்ப்பார்த்திருந்த 12 செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 32 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதித் தினத்தில் உள்ளவாறு 55 சதவீதம் முதல் 72 சதவீதம் வரை மற்றும் 78 சதவீத முன்னேற்றம் ஒன்றினை எதிர்ப்பார்த்த 3 செயற்திட்டங்கள் நெருங்கிய முன்னேற்றம் முறையே 16 சதவீதம், 55 சதவீதம் மற்றும் 30 சதவீதம் மாத்திரமாகும். நிலையத்தின் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர் விளகிச் செல்லல் மற்றும் வெளிசாராருடன் முறையான இணைக்கப்பாட்டுடன் ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமை இதற்கான காரணமாக இருந்தது.

(உ) இறக்குமதி செய்யப்பட்ட பட்டரிகளின் நியமங்களை பரிசோதனை செய்யும் வாணிப செயற்திட்டத்தின் மூலம் கிடைத்த வருமானம் 2013 ஆண்டிற்கு ஒப்பாக 2014, 2015 மற்றும் மீளாய்வாண்டின் போது முறையே 79 சதவீதத்தினால், 87 இனால் மற்றும் 60 இனால் குறைவடைந்திருந்தது. சில பரிசோதனைக்காக வசதிகள் காணப்படாமை, ஆய்வு அறிக்கைகள் தாமதமடைதல் காரணத்தினால் முக்கிய சேவை நாடும் நிறுவனம் ஆகிய இலங்கை கட்டளைகள் நிறுவனத்திலிருந்து கிடைத்த கட்டளைகளின் எண்ணிக்கை குறைந்திருந்தது. மேலும், கட்டளைகளை பெறுவதற்காக சேவை நாடும் நிறுவனத்துடன் இணக்கமொன்று வராமல் இச் செயற்திட்டங்களுக்காக 2011 ஆண்டின் போது ரூபா 10,669,625 இற்கான கிரயத்திற்கு பட்டரி பரிசோதனை செய்யும் உபகரணங்கள் கொள்வனவு செய்திருந்த போதிலும் அவ் உபகரணங்கள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரத்தொட்டுவில மிதிகமுவ ஓடையில் சுயமாக இயங்கும் மூடி ஒன்றினை கொண்ட படலை ஒன்றினை பொருத்தும் வாணிப செயற்திட்டம் 2013 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2014 பெப்ரவரி மாதத்தில் பூர்த்தி செய்வதற்கு எதிர்ப்பார்த்திருந்த போதிலும், அதனைப் பூர்த்தி செய்வதற்கு 2017 ஜூலை வரை 03 வருடங்கள் கடந்துள்ளது. செயற்திட்டத்தின் மதிப்பீட்டு வருமானம் ரூபா 227,000 தொகை மற்றும் மதிப்பீட்டு செலவு ரூபா 187,838 தொகை எனினும் முறையான ஆய்வு ஒன்றின் பின்னர் மதிப்பீடு தயாரிக்கப்படாமையினால் ரூபா 412,417 இற்கான உள்ளவாறான கிரயமொன்றினை மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது.

(ஆ) நிலையத்தினால் ரன்டம்பே மாணவ படைச் சேனை நிலைய உயிர்வாயு அலகினை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் 2014 ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2015 பெப்ரவரி மாத இறுதியில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2017 ஜுலை வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், செயற்திட்டம் செயற்படாத செயற்திட்டமொன்றென காணப்பட்டது. இரு சாராருடன் முறையான உடன்படிக்கையொன்று அல்லது மேலதிகக் கிரயம் மேற்கொள்ளல் தொடர்பாக தெளிவான இணக்கமொன்று மேற்கொண்டிருக்காததுடன் செயற்திட்டத்தின் மதிப்பீட்டு வருமானம் ரூபா 104,995 தொகை மற்றும் மதிப்பீட்டுச் செலவு ரூபா 95,450 தொகையெனினும் மீளாய்வாண்டின் இறுதி அளவில் ரூபா 122,063 இற்கான கிரயமொன்று செலவிடப்பட்டிருந்தது.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையத்தின் பிரதான இருப்புக் களஞ்சியத்தில் ரூபா 404,404 தொகைக்கான 104 இருப்பு விடயங்கள் 05 வருடங்கள் முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) திட்டங்கள் வடிவமைத்தல் மற்றும் ஆலோசனைகள் வழங்கள் துறையில் ரூபா 10,459,163 தொகை பெறுமதியான 05 உபகரணங்கள் 2015 ஆண்டு முதல் விளைவற்றும் மற்றும் ரூபா 51,267,312 தொகை பெறுமதியான 05 உபகரணங்கள் மீளாய்வாண்டின் போது குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

உரிய சந்தர்ப்பத்தில் இயந்திரங்களை பழுதுபார்க்காமை, மதிப்பீடு போதியளவினதாக காணப்படாமை, வெளித் தரப்பினருடன் முறையான உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படாமையின் காரணத்தினால் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த 4 வாணிப செயற்திட்டங்களில் இருந்து கிடைத்திருந்த ரூபா 5,643,133 வருமானத்தை மிகைத்து ரூபா 7,929,857 தொகைக்கான செலவு ஒன்று மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தமையால் ரூபா 2,286,724 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

## 4.5 தாமதமாகிய செயற்திட்டங்கள்

வெளித் தரப்பினருடன் முறையான உடன்படிக்கையொன்று அல்லது இணக்கமொன்று இன்மையால் 2015 மற்றும் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு தீர்மானித்திருந்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 15,158,706 தொகைக்கான 04 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு இறுதித் தினம் வரை பூர்த்தி செயற்படாமல் காணப்பட்டதுடன் அச் செயற்திட்டம் செயற்படாத நிலைமையில் காணப்பட்டது. அச் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டிய நாளை நீடிப்பதற்கு அல்லது செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு மற்றும் உள்ளவாறான பெறுமதிகளிடையே 15 சதவீதம் முதல் 67 சதவீதம் வரை முரண்கள் அவதானிக்கப்பட்டிருந்தமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தியிருக்கவில்லை.